07.11.2025

அ.வ.எண்.192/2017

வா.சா.3 - ராமாத்தாள், க/பெ.ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 07.11.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் படிக்கவில்லை. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கு இடம் உள்ளது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வழக்குரை மற்றும் பதிலுரை ஆகியவற்றை படித்து பார்த்தேன என்றால் இல்லை, படிக்க கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியும். நான் கைரேகை வைத்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வேயர் வந்து அளந்தபோது நான் இல்லை என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனக்கு என்ன அளவு அளக்கப்பட்டது என்றும், பிரதிவாதிக்கு எவ்வளவு நிலம் அளக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ.2 சரோஜா எத்தனை ஆண்டுகளாக அங்கு உள்ளார் என்றால் திருமணம் ஆனது முதல் 40-45 ஆண்டுகளாக இருந்து வருகிறார். சரோஜா, மருதக்குட்டியின் வீட்டில் வேலை செய்தாரா என்றால் அவ்வப்போது வந்து வேலை செய்வார். எனது தம்பி மருதகுட்டி பிரதிவாதி சுவர் எழுப்ப முயற்சி செய்ததாக என்னிடம் சொன்னரா என்றால் இல்லை. என் தம்பி வழக்கு போட்ட விவரத்தை என்னிடம் சொன்னரா என்றால் ஆமாம். அதில் என்னையும் தரப்பினராக சேர்க்கப்போவதாக சொன்னாரா என்றால் அதை பற்றி சொல்லவில்லை, வழக்கு போட வேண்டும் என்று சொன்னார்.

3. வழக்கு சொத்தில் எனக்கு 1/3 பாகம் தர வேண்டும். வழக்கு சொத்து குறித்து தற்போது வரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில், என் தகப்பனார் வாங்கிய 10 ஆண்டுகள் கழித்து 1ம் பிரதிவாதியை பிரச்சனைக்குரிய பகுதியை பயன்படுத்தி கொள்ள அனுமதி அளித்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில், என்

தகப்பனார் அனுமதி வழங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் பத்தி 6 ல், பிரச்சனைக்குரிய பகுதி கிழமேல் 23 முழம், தென்வடல் 24 முழம் என குறிப்பிட்டுள்ளேன், அதன் அடி கணக்கு என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் 2 அயிட்ட சொத்துக்களில் எந்த அயிட்ட சொத்திற்கு பிரச்சனை என்றால் தெரியாது.

4. என் தகப்பனார் எந்த ஆவணத்தின் அடிப்படையில் யாரிடம் சொத்தை வாங்கினார் என்று சொல்ல முடியுமா என்றால் நஞ்சம்மாளிடம் இருந்து வாங்கினார். நஞ்சம்மாள் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்களை விற்பனை செய்தார் என்றால் தெரியாது. என்னுடைய சொத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தால் தான் அதன் அளவுகள் மற்றும் அதனை விற்பனை செய்தவர்கள் மற்றும் அதன் மூல ஆவணங்கள் பற்றி சொல்ல இயலவில்லை என்றால் திருமணம் ஆகி சென்றுவிட்டதால் என்னால் சொல்ல முடியவில்லை. சொத்து எந்த காலை எண்ணில் உள்ளது என்று தெரியாது.

5. வழக்கு சொத்து முழுவதிற்கும் என் தம்பி தான் உரிமையாளர் என்று சொல்வது தவறு என்றால் அனைவருக்கும் சேர்ந்து சொந்தமானது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 புகைப்படத்தில் சுவர் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் தகப்பனாருடையதா என்றால் எனக்கு படிக்க தெரியாது. அதனால் தெரியாது. என் தகப்பனார் கிரயம் பெற்ற பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, வீடு வாங்கியது தெரியும். நான் பத்திரத்தை பார்த்தால் தான் நீதிமன்றததில் அந்த அளவுகளை சொல்ல முடியும் என்றால் சரிதான். பிரதிவாதி சொத்தில் சுமார் 70 வருடங்களாக உள்ளனர் என்றால் தெரியாது. பிரதிவாதிகளுக்கு பின்னிட்டு நாங்கள் சொத்து வாங்கி வந்தோம்.

6. பிரதிவாதியின் தகப்பனார் CONE WINDING வைத்து நடத்தி வந்தார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி சின்னக்குட்டி இறந்த விவரம் தெரியும். சர்வேயர் அறிக்கையில் எங்களுக்கு முரணாக உள்ளது என்றும், அது சம்மந்தமாக

மேல்முறையீடு செய்யப்போவதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு பின்னிட்டு வருவாய் ஆவணங்களில் உள்ள அளவீடு குறித்து ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எங்களது இடத்தில் படிக்கட்டு, கழிவறை, குளியலறை கட்டியுள்ளனர் என நான் கேட்டேன். என் தம்பி தாக்கல் செய்த வழக்கில் படிக்கட்டு, குளியலறை, கழிவறை ஆகியவற்றை எடுக்க சொல்லி கேட்கவில்லை என்றால் சரிதான், நான் கேட்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தான் என் தம்பி சுவர் வைத்துள்ளார் என்றால் சரிதான். **புகைப்படம் மற்றும் குறுந்தகடு மற்றும் ரசீது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** அந்த சுவற்றை என் தம்பி தான் வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அநத் சுவற்றை எடுத்துக்கொள்ளலாமா என்றால் பிரச்சனையை முடித்த பின்னிட்டு எடுத்து கொள்ளலாம். சுவர் வைத்துள்ள இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என் தம்பியிடம் ஆவணம் கேட்டேனா என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்த பின்னிட்டு, வருவாய் ஆவணங்களில் என்னுடைய பெயரை சேர்க்க முயற்சித்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. 1 மற்றும் 2ம் அயிட்ட சொத்துக்களின் நான்கு எல்லை பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

8. தாவா சொத்தில் வீடு உள்ளதாக சொல்லப்படும் நிலையில் அதற்கான குடிநீர் வரி, மின்சார கட்டணம், வீட்டு வரி யார் பெயரில் உள்ளது என்றால் என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்குசொத்துக்கும், ஆவணங்களுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையான தரப்பினர்களை சேர்க்கவில்லை என்றும், எனவே வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒருபோதும் இடையூறு செய்யவில்லை என்றும், நானும், என் தம்பியும் சேர்ந்து பிரதிவாதி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

9. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளந்து எங்களுக்கு இடமில்லை என்று சொல்லியுள்ளார் என்றும், அதை தெரிந்துகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்தை

பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர எங்களுக்கு அறுகதையில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனக்கு படித்து காட்டினார்கள் என்றால் சரிதான். அவர்களாக டைப் செய்து கொண்டு வந்ததை என்னிடம் காட்டி கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான்.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur